# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 18 இதழ் - 2 பிப்ரவரி - 2005



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம்-638 701. தமிழ்நாடு, இந்தியா

© 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382

E-mail : kangayamcofc@eth.net



எக்லீசியா வேதாகமக் கல்லூரியின்
ஐந்தாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து
கொண்ட கூட்டத்தின் ஒரு பகுதி

## ஆசானின் அறிவுரையில் ...


1. நிறுவன ஆசிரியர் உரை ........ 1
2. நல்லொழுக்கம் மிகுந்த வாழ்க்கை இரட்சிப்புக்கு போதாது ஏன்? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 20
5. சிறுவர் பகுதி ........ 24
6. வெளிப்படுத்தின விசேஷம் ஒரு கண்ணோட்டம் 25
7. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 26
8. சுனாமி தரும் தேவ எச்சரிப்பு ........ 31

# THIRUMARAI AASAAN
Published by Church of Christ

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 19 February - 2005 Issue - 2

நிறுவன ஆசிரியர் உரை

# இரட்சிப்பில் தேவனுடைய பங்கும் மனிதனுடைய பங்கும்

கிறிஸ்தவ மார்க்கத்தில் எந்த ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இருக்கும் என்பது வேதனையான உண்மை. இரட்சிப்பு என்ற பொருளும் அதற்கு விதி விலக்கல்ல. இந்த முரண்பாடுகளுக்கு வேதாகமம் பொறுப்பல்ல. மனிதனுடைய சிறுமதியும், தான் ஏற்கனவே கொண்டிருக்கிற கருத்துக்குப் பொருந்தி வருகிற வசனங்களை மட்டும் தேடிப் பிடித்து வைத்துக் கொண்டு, அதே பொருளைக் கூறுகிற மற்ற வசனப் பகுதிகளைப் புறக்கணித்து ஒதுக்கி ஓரம் கட்டி விடுவது தான் காரணம்.

எந்த ஒரு கருத்தைப் பற்றியும் சரியான முடிவுக்கு வரவேண்டுமானால் அதைப்பற்றிச் சொல்லப்பட்ட எல்லா வசனங்களையும் படித்து அவைகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருக்கிறது என்று ஆய்வு செய்து முடிவுக்கு வரவேண்டும். இல்லாவிட்டால் குருடர்கள் யானை பார்த்த கதை போல கருத்து வேற்றுமைகள் இருந்து கொண்டு தான் இருக்கும். இரட்சிப்பு போன்ற முக்கியமான காரியங்கள் நம் நித்தியம் சம்பந்தப்பட்ட விஷயம். இதைக் குறித்து இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பது அபாயம். ஆகவே அதைப் பற்றி வேத வசனங்களின் வெளிச்சத்தில் தெளிவு பெற முயற்சிப்போம்.

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு".

"ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல", (எபே 2:8,9) என்கிற வசனத்தையும், "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவா. 3:16)என்கிற வசனத்தையும் ஆதாரமாகக் காட்டி இரட்சிப்பு தேவனுடைய சுத்த கிருபை அதில் மனிதன் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்று போதிக்கின்றனர்.

வேறு சிலர் ..... "நீங்கள் உலகம் எங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்".

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15,16) என்கிற வசனத்தையும் "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38) என்கிற வசனத்தையும் சுட்டிக் காட்டி இரட்சிப்பின் திட்டத்தில் மனிதனுக்கும் பங்கு உண்டு என்று வற்புறுத்துவர்.

இருசாரார் கூற்றிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் முழு உண்மை அல்ல. ஒருவர் இரட்சிப்புக்கு தேவனுடைய கிருபை மட்டும் போதும் என்கிறார். மற்றவர் மனுஷருடைய கிரியை முக்கியம் என்கிறார். வேதாகமத்தை ஆய்ந்து பார்க்கின், இரட்சிப்புக்கு தேவனுடைய கிருபையும் வேண்டும்; மனுஷருடைய கிரியையும் வேண்டும் என்பது புலனாகும். மாற்கு 16:15,16 மற்றும் அப் 2:38 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் தேவ கிருபை மட்டும் இரட்சிப்புக்குப் போதும் என்று போதிப்பதும், அதை ஏற்றுக் கொள்வதும் தவறானது. அதே போல சில கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதே இரட்சிப்புக்குப் போதுமானது என்பதும் அபத்தம்.

கிறிஸ்து, இரட்சிப்புக்குப் பல வழிகள் உண்டு என்று போதிக்கவில்லை. "என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது" என்கிறார் (யோவான் 7:16) அந்த உபதேசத்தில் மாற்றம் ஏற்படக் கூடாது என்று கருதி, அதைத் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரிடத்தில் ஒப்புவித்து, அவைகளின்படி அப்போஸ்தலர்களை வழி நடத்தவும், மறந்து போனதை நினைவுக்குக் கொண்டு வரவும் ஏற்பாடு செய்தார். (யோவான் 14:26; 16:13) அப்படிப்பட்ட தெளிவான முறையில் உபதேசத்தைக் கற்றுக் கொண்ட அப்போஸ்தலர்கள் இரட்சிப்பைக் குறித்து எபேசு பட்டணத்தில் ஒரு மாதிரியும், கொரிந்து பட்டணத்துக்குப் போய்

அங்கு ஒருவிதமாகவும் போதிப்பார்களா? வேதாகமத்தில் தொகுத்து அளிக்கப்பட்டிருக்கும் இரட்சிக்கப்பட்ட சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நீங்கள் கவனமாக வாசித்துப் பார்த்தால் அவைகள் (எபே 2:8-9) க்கும், மாற்கு 16:15,16 மற்றும் அப் 2:38க்கும் ஏற்ற வகையில் தான் நடைபெற்றிருக்கிறது என்று அறியலாம். இயேசு கிறிஸ்து ஒரே வழி, அவருடைய போதனையும் ஒரே போதனைதான்.

இயேசு கிறிஸ்து தம்முடைய மரணத்துக்குச் சற்று முன்பாக அவரைப் பின்பற்றுகிற சீஷர்கள், எல்லாரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று உருக்கமாக ஜெபித்தார். (யோவான் 17:20,21) அப்படியானால் அவரைப் பின்பற்ற விரும்புகிற அனைத்து மக்களும் ஒரே வழியில் நடக்கவும், ஒரே விதமாக இரட்சிக்கப்படவும் வேண்டுவதும் கூட அவசியமன்றோ! ஆகவே இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு சம்பவத்திலும் (எபே 2:8-9) மற்றும் (யோவான் 3:16) ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற தேவ கிருபையும், (மாற்கு 16:15,16) மற்றும் (அப். 2:38) ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ள மனிதனுடைய பங்கும் சந்தேகத்துக்கு இடமின்றி இணைந்து இருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் பார்த்துக் கொண்டார்.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் எவ்வாறு தேவனுடைய அன்பு, அழிந்து போகிற மானிடருக்காகச் சுரந்தது என்றும், கர்த்தராகிய இயேசு அதை அறிந்து எப்படித் தன்னை அர்ப்பணித்துத் தியாகம் செய்தார் என்பதையும் கேட்டு, உள்ளத்தில் விசுவாசித்து ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசித்தார்கள் என்று விளக்குகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இரட்சிப்பின் திட்டத்தில் அனைத்து அம்சங்களும் இழையோடுவதைக் கவனியுங்கள்.

பல சமயங்களில், நாம் மனிதனுடைய பங்கையே அதிகமாக வலியுறுத்திக் கொண்டு இரட்சிப்பில் தேவ கிருபையின் இன்றியமையாமையை மறந்துவிடுகிறோம். விசுவாசத்தின் மூலமாக எப்படி ஒரு மனிதன் அந்தக் கிருபையைச் சந்தித்து மறுபடியும் பிறக்கிறான் என்று விளக்கத் தவறி விடுகிறோம். அதனால் மக்கள் தேவகிருபையின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அது சரி அன்று.

கிருபை என்பது என்ன? கிருபை என்பது நாம் சம்பாதிக்காத ஓர் சொத்து. அதைப் பெற்றுக் கொள்வதற்கு நமக்குத் தகுதி கிடையாது. அதற்கு ஈடாக நாம் ஒன்றும் தர வேண்டியதில்லை. அதைப் பெற்றுக் கொள்ள ஒரு தகுதியும் நிர்ணயிக்கப்படவும் இல்லை. அதை, ரோமத் திருச்சபைக்கு அப்போஸ்தலன் பவுல் கீழ்வருமாறு விளக்குகிறார். கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்று எண்ணப்படாமல் கடன் என்று எண்ணப்படும்.

ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிற வரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால் அவனுடைய விசுவாசம் அவனுக்கு நீதியாக எண்ணப்படும். (ரோமர் 4:4;6) ஆக, தேவ கிருபை என்பது,

இரட்சிக்கப்படுவதற்கு எவ்விதத் தகுதியுமில்லாத ஒருவனை இரட்சிப்புக்குள் கொண்டுவர தேவன் பாராட்டுகிற இரக்கம் என்று சொல்லலாம். ஒருவன் பாவ மன்னிப்புப் பெற்று இரட்சிப்புக்குள் வர நீதிமானாக இருக்க வேண்டும். ஆனால் எல்லாரும் பாவம் செய்து கெட்டுப்போய் விட்டபடியால் ஒருவருக்கும் அந்தத் தகுதி கிடையாது. பின்னர் ஒருவன் பாவமன்னிப்பு அடைவது எங்ஙனம்? அதற்கு தேவனே ஒரு எளிமையான திட்டத்தை வகுத்துத் தந்துள்ளார் என புதிய ஏற்பாடு நமக்குப் போதிக்கிறது. அதாவது ஒரு பாவி, சிலுவை மரத்தில் தொங்கி மரித்த இயேசுவின் வழியாகவே தேவ அன்பையும், தேவனுடைய இரக்கத்தையும் தேவ கிருபையையும் பெற்று தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்கமுடியுமே தவிர, தன்னுடைய நீதியின் கிரியைகளினிமித்தம் அது சாத்தியப்படாது ஏனெனில் நம்முடைய நீதி என்பது அழுக்கடைந்த கந்தை என்று ஏசாயா கூறுவதை (ஏசா 6:6-11). "எல்லோரும் பாவம், செய்து தேவ மகிமையற்றவர்களாகி விட்டோம் (ரோமர் 3:23) "நீதிமான் ஒருவனும் இல்லை (ரோமர் 3:10) என்று கூறி பவுல் அப்போஸ்தலனும் அதை ஆமோதிக்கிறார். ஆகவே தேவனுடைய கிருபையில்லாமல் தன் சுய முயற்சியால் எந்த ஒரு மனுஷனும் தேவனுடைய சிம்மாசனத்துக்கு முன்பாக நீதிமானாக முடியாது.

விசுவாசத்துக்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள மனிதன் என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டியிருக்கும் என்பதைப் பற்றி இங்கே பேச்சில்லை. அப்படிப்பட்ட செயல்பாடுகள் அவனுடைய இரட்சிப்பை அவனுக்குச் சம்பாதித்துத் தருவதில்லை. அவைகள் தேவனுடைய கிருபையிலும், இயேசு கிறிஸ்துவின் மரணத்திலும் வைக்கும் விசுவாசத்தின் வெளிப்பாடே அவைகள் அவனுடைய பாவமன்னிப்பை உள்ளடக்கிய தேவ கிருபையையும், இரக்கத்தையும் பெற்று தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்குவதற்கு அவனுக்கு தேவைப்படுகிற காரியங்களே அன்றி அவைகளே இரட்சிப்புக்குப் போதுமானவைகள் அல்ல.

உதாரணமாக, ஒரு தர்ம சிந்தையுள்ள செல்வந்தன் ஒரு அனாதை விடுதிக்கோ அல்லது குருடர் பள்ளிக்கோ ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை இனாமாகக் கொடுக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்பள்ளியின் நிர்வாகி வங்கிக்கு எடுத்துச் சென்று பணம் பெறுகிறார். காசோலையை வங்கிக்கு எடுத்துச் சென்று பணமாக மாற்றினதே அந்த தொகையை பெற்றுக் கொள்வதற்கு தகுதியாகி விடுமா? அதனால் இலட்சம் ரூபாய் இனாமாகக் கொடுத்தார் என்ற உண்மை மாறுவதில்லை. அதேபோல் அந்தக் காசோலையை வங்கிக்கு எடுத்துச் சென்று பணமாக மாற்றாதவரை அந்தக் காசோலையால் பயன் கிடையாது. அதைப் போன்றுதான் இரட்சிக்கப்படுவதற்கு தேவ கிருபையும், கிறிஸ்துவினுடைய தியாகமும் அவசியம். அது இலவசம், ஆனால் அதைப் பெற்றுக் கொள்ள விசுவாசம் தேவை "விசுவாசத்தின் மூலம்" என்று சொல்லாச்சிக்கு அதுவே பொருள்.

தேவனால் கொடுக்கப்படுகிற இலவசமான ஈவாகிய இரட்சிப்பை மனிதன் விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் (எபே 2:8,9) கூறுகிற முழுமைக் கருத்து அப்படியில்லை என்று சொன்னால் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் என்று நேரடியாச் சொல்லியிருக்கலாமே விசுவாசத்தைக் கொண்டு என்ற சொற்றொடர் ஏன்?

ஆகவே இயேசு இரட்சிப்பின் திட்டத்தில் விசுவாசத்தின் வெளிப்பாடாகிய மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கும் நிபந்தனைகளை நாம் குறைவாக மதிப்பிடவோ உதாசீனம் செய்வதோ கூடாது.

ஆனால், ஒன்றை நாம் எல்லாருமே ஒத்துக்கொள்ள வேண்டும். இயேசுவின் இரத்தமே இரட்சிப்பின் மையம். நாம் கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய இரத்தத்தின் வல்லமையைச் சார்ந்து நிற்கிறோம். கிறிஸ்துவே நம் பாவம் போக்கும் பரிகாரி. இரட்சிப்பின் திட்டத்தில் தேவ கிருபை சிலுவையின் வழியாக மனிதனிடத்திற்கு இறங்கி வருகிறது. மனிதனுடைய விசுவாசம் அதே சிலுவை வழியாக தேவனிடத்துக்கு ஏறிப்போகிறது.

தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்குவதற்கு மனிதனுக்குள் எவ்விதமான தகுதியும் இல்லை. ஆகவே தன்னுடைய பாவங்களுக்காக தானே பாவ மன்னிப்புப் பெற முடியாது என்றும், அதைக் கர்த்தருடைய கிருபையே செய்யும் என்றும் புதிய ஏற்பாடு தெளிவாகப் போதிக்கிறது. கிருபையின் மூலமாக நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள்; இது கிரியையினால் உண்டானது அல்ல (எபே 2:8,9) என்கிற வசனப்பகுதி நமக்குப் போதிக்கிற உண்மை என்ன? நம்முடைய இரட்சிப்புக்கு மனிதனுடைய கிரியைகளை விட தேவ கிருபையே பிரதானமானது. அந்த வல்லமை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் இருக்கிறது. நமக்குப் பாவமன்னிப்பு உண்டாவதற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தமே முழு முதற்காரணமாகிறது பாவப்பிணியால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் நம்மை விடுவிக்க வல்லவர் இயேசு கிறிஸ்துவே. நம்முடைய ஆவிக்குரிய நோயைத் தீர்க்க ஒரே ஒரு மருந்து இயேசுவின் இரத்தம் மட்டுமே.

ஆகவே இரட்சிப்பில் தேவனுடைய பங்கே பிரதானமானது. கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது தேவனுடைய ஈவு; கிரியையினால் அல்ல ஒருவரும் பெருமை பாராட்டுவதற்கு இடம் இல்லை. எவ்வளவு அருமையான ஏற்பாடு! அவருடைய மகத்தான அன்புக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டாமா? இயேசுகிறிஸ்துவின் சிலுவை வழியாக தேவனுடைய இரக்கமும் கிருபையும் வெளிப்பட்டிருக்கிறதை நீங்கள் உணர முடிகிறதா?

இப்பொழுது இரட்சிப்பில் மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பார்ப்போம். நாம் சிந்தித்த (எபே 2:8,9) ஒரு பகுதி நாம் தேவனுடைய கிருபையால் இரட்சிக்கப்படுகிறோம் என்று மட்டும் சொல்லாமல் மனிதனுடைய விசுவாசத்தைக் கொண்டும் இரட்சிக்கப்பட்டீர்கள்

என்று கூறுகிறது. வேதாகமம் இரட்சிப்பு தேவனுடைய ஈவு என்கிறது. அதற்கு இரட்சிப்பு நிபந்தனை அற்றது என்று பொருளா? இல்லை. நீங்கள் ஆம், இரட்சிப்பு நிபந்தனையற்றது என்று நான் நம்புகிறேன் என்று சொல்வீர்களானால் "விசுவாசத்தைக் கொண்டு" என்ற சொற்றொடருக்கு அங்கு வேலையில்லையே! கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது தேவனுடைய ஈவு என்பதெல்லாம் எவ்வளவு அர்த்தமுள்ளவைகளோ, அதே அளவு விசுவாசத்தைக் கொண்டு, என்பதும் அர்த்தமுள்ளதே. ஈவைப் பூரணப்படுத்துகிறதற்கு இரண்டு காரியங்கள் தேவைப்படுகிறது. ஒருவர் கொடுக்க வேண்டும்... மற்றொருவர் பெற்றுக் கொள்ள வேண்டும். பெறுவதற்கு அங்கே ஒருவர் இல்லையென்றால் ஈவு பூரணப்பட்டதாகக் கொள்ள முடியாது.

தேவன் தம்முடைய இரக்கத்தினால் இரட்சிப்பை மனிதனுக்கு ஈந்ததற்காக ஸ்தோத்திரம். ஆனால் மனிதன் விசுவாசத்தின் மூலம் அதைப் பெற்றுக் கொள்ளாதவரை அவன் அதை அடைய முடியாமல் இன்னும் இழந்து போன நிலைமையிலேயே இருப்பான். விசுவாசம் தான் நாம் தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ள வகை செய்கிறது. இயேசு கிறிஸ்து, இரட்சிப்பின் நிபந்தனைகளில் மனிதனுடைய பங்கைப் பற்றி மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அதைக் குறைவாக மதிப்பிட்டு தவறு செய்து விடாதபடி தேவன் காத்துக்கொள்வாராக!

"விசுவாசத்தைக் கொண்டு" என்ற சொற்றொடரில் பொதிந்து கிடக்கிற கருத்து என்ன? விசுவாசத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிற ஒரு கருத்தை மட்டும் எடுத்துக் கொண்டு மற்ற வசனப்பகுதிகளை புறக்கணித்துப் போடுவதா? விசுவாசத்தைக் குறித்து சொல்லப்பட்ட எல்லா வசனப்பகுதிகளையும் படித்து ஒன்றோடொன்று எவ்வாறு சம்பந்தப் பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். இரட்சிப்பில் தேவனுடைய பங்கும், மனிதனுடைய பங்கும் சிலுவையை மையமாகக் கொண்டிருக்கிறது. சிலுவையல்லாமல் மனிதனுடைய பங்கு அர்த்தமற்றது. தேவனுடைய பங்கு கூட சிலுவையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்றாலும் கூட விசுவாசம், ஒப்புக் கொடுத்தல் என்பவைகளின் பொருளை சரியாக விளங்கிக் கொள்ளாமற் போனால், இழந்த பாவிக்கு அது பொருளற்றதே. ஒருவன் தன்னுடைய விசுவாசத்தைக் கீழ்ப்படிதலில் வெளிப்படுத்த வேண்டும். தேவனுடைய பங்கு என்பதற்கு (எபே 2:8,9) ஐ பயன்படுத்தினோம் ஈவையும் குறித்துப் பேசுகிறது. அவ்வாறே மனிதனுடைய பங்கு என்பதற்கும் அதைப் பொருத்திப் பார்ப்போம். ஏனெனில் அது மனிதனுடைய விசுவாசத்தைக் குறித்தும் பேசுகிறது.

தேவன் நமது இரட்சிப்புக்கு எவ்வளவோ செய்திருந்த போதிலும், விசுவாசத்தினாலே நாம் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதனால் பயன் ஒன்றும் ஏற்படாது. முதலாவது நாம் இரட்சிப்பின் வேர் எது என்று கண்டுபிடித்து பின்னர் இரட்சிப்பின் கனியைத் தேட வேண்டும். இயேசுக் கிறிஸ்துவின் இரத்தமே இரட்சிப்புக்கு இன்றியமையாதது என்பது சரி.

ஆனால் நம்மை நீதிமானாக்குவது நமது விசுவாசமே. இப்பொழுது நமக்குக் கருத்து வேற்றுமை எங்கே இருக்கிறது? யோவான் 3:16 லும் மாற்கு 16:16 லும் உள்ள விசுவாசிக்கிறவன், என்ற வார்த்தையின் கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் இந்த வார்த்தைக்கு நம்பு, சார்ந்து கொள் என்று பொருள் கொள்ளலாம். நாம் இரட்சிக்கப்பட கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். அதற்கு நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையைச் சார்ந்து நிற்கிறோம். பாவ நிவாரண பலியாகிய கிறிஸ்துவின் மேல் நாம் நம்பிக்கை வைக்கிறோம் என்று பொருள். விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வருகிறது. (ரோமர் 10:17) விசுவாசமானது நம்பப் படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது என்கிறார் எபிரேய நிருப ஆசிரியர். (எபி 11:1)

விசுவாசம் என்பது செயலையும் சேர்த்துத்தான் குறிக்கிறது; செயல் இல்லாத விசுவாசத்தை வேதாகமம் ஆவியில்லாத சரீரம் என்று வாக்களிக்கிறது. (யாக் 2:26)

ரோமர் 4:3ல் "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" என்கிறது. ஒரு குழந்தையை ஈன்றெடுப் பதற்குரிய சரீர பெலன் சாராளுக்கு அற்றுப் போன பின்பு, சாராள் மூலமாக ஓர் ஆண் மகவைத் தருவேன் என்று சொன்ன போது மற்ற கட்டளைகளைப் போலவே இதுவும் அவனுக்குச் சோதனையாய் அமைந்தது. ஆனால் ஆபிரகாம் தன் விசுவாசத்தில் உறுதியாக இருந்து வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருந்தான். அவனுடைய விசுவாசம் உறுதியுள்ளதாகவும், கீழ்ப்படியத் தயாராகவும் இருந்தது. பின்னர் ஒரு கட்டத்தில் ஈசாக்கைப் பலியிட தேவன் கட்டளையிட்ட போது நாம் அவருடைய விசுவாசத்தின் கனியைக் காணமுடிகிறது. (எபி 11:17-19) மரித்தோருக்கு ஜீவனைக் கொடுக்கிற தேவனிடத்தில் ஆபிரகாம் விசுவாசம் வைத்தான். அதனால் ஈசாக்கைப் பலியிடத் தயங்கவில்லை. அவனுடைய விசுவாசம் செயல்படாததாக இருந்திருந்தால் அது தேவனுக்கு பிரியமாய் இருந்திருக்காது.

**"விசுவாசத்தைக் கொண்டு"** என்ற சொற்றொடரில் மனந்திரும்புதலும் **"அடக்கம். அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவேண்டியது"** என்று இயேசு சொன்னார். (லூக் 24:7) சபை ஆரம்பிக்கப்பட்ட நாளில் தேவனுடைய கிருபையை எவ்வாறு அடைந்து பாவ மன்னிப்புப் பெறுவது என்று பேதுரு கூறினார். **"பாவ மன்னிப்புகென்று, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்"** (அப் 2:38).

மனந்திரும்புதல் என்பது ஒரு மனிதன் சிலுவையண்டை வந்து நின்று தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும் தேவ நீதியையும் நோக்கிப் பார்த்து கிறிஸ்து இயேசு அவனுக்காக மரித்தார் என்று உணர்வதாகும். **"நாம்**

**அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்"** (II கொரி 5:21) மனிதன் இயேசுவின் இரத்தத்தின் மேன்மையையும், வல்லமையையும் உணரா விட்டால் மனந்திரும்ப மாட்டான். அவன் சிலுவையண்டையில் வந்து, இயேசுவின் கால்களிலும், கைகளிலும் அடிக்கப்பட்ட ஆணிகளின் சத்தத்தைக் கேட்டு, அவருடைய வேதனையின் பெருமூச்சின் உஷ்ணத்தால் மனமுருகி ஆண்டவரே! என் மேல் இரக்கமாயிரும் என்று கதறுவான். **விசுவாசத்தைக் கொண்டு** என்ற சொற்றொடரில் அறிக்கையிடுதலும் அடக்கம்.

**கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.**

**நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப் புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.** (ரோமர் 10:9-10)

பின்னர் **ஞானஸ்நானம்** : இப்பொழுதும் நம் கண் முன்னே சிலுவையை நிறுத்தி நோக்குகிறோம். நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம் ஆனால் விசுவாசத்தை கொண்டு என்பதை மறந்து விடக்கூடாது. நம்முடைய கர்த்தரை விசுவாசித்து மனந்திரும்பி, அறிக்கை செய்ய வேண்டும் என்பதோடு நிறுத்திக்கொள்ளாமல், நம்முடைய மனதில் மறைந்து கிடக்கும் விசுவாசத்தை சிறந்த முறையில் வெளிப்படுத்தும் ஞானஸ்நானத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற்கு 16:16) ஞானஸ்நானத்தின் சிறப்பு நிலையை அறியாமல் மார்க்க உலகம் குழம்பி, பிரிந்து கிடப்பது எத்துணை வேதனை! சிலுவையில் இல்லாமல் அதற்கு ஒரு சிறப்பும் இல்லை; அதே போல் விசுவாசமும் மனந்திரும்புதலும் இல்லாமல் சிலுவைக்கு ஒரு சிறப்பும் இல்லை ஞானஸ்நானத்தின்போது நம்முடைய பழைய பாவமனுஷனை அடக்கம் செய்து, உயிர்த்தெழுதலினால் அவருடைய சாயலில் இணைக்கப் படுகிறோம். ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்கென்று கொடுக்கப்படுகிறது. (அப் 2:38). ஏனெனில், இந்த விசுவாச அறிக்கை மூலமாக அவருடைய மரணத்தில் இணைக்கப்பட்டிருக்கிறோம். அவருடைய மரணத்திலும் இரத்தத்தினாலும் தான் நம்முடைய பாவங்களுக்குரிய பிரயாசித்தம் கிடைக்கும்.

ஞானஸ்நானம் என்னும் ஒரு செயலின் மூலம் கர்த்தரோடு அவருடைய மரணத்தில் இணைக்கப்படுவது எத்துணை மகிழ்ச்சியான காரியம்! சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறக்கிறோம். கீழ்ப்படிதலின் மூலம் நம்முடைய பெருமையைப் பறை சாற்றவில்லை. மாறாக, நாம் கர்த்தரை நேசித்துக் கனப்படுத்துகிறோம். எப்படி ஆபிரகாம் தேவனை நேசித்துக் கீழ்ப்படிந்து தேவனைக்

கனப்படுத்தினாரோ அவ்வண்ணமாக நாமும் செய்கிறோம். ஆனாலும் நாம் இரட்சிப்பைப் பற்றி பிரசங்கிக்கும் போது முழுமையான சத்தியத்தையும் சொல்ல வேண்டும். தேவனுடைய கிருபையிலிருந்தும், கிறிஸ்துவினுடைய சிலுவையில் இருந்தும் தொடங்க வேண்டும்.

மாற்கு 16:15ல் விசுவாசமும் ஞானஸ்நானமும், சொல்லப்படாததற்கு முன்பு, பூலோகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். சுவிசேஷம் என்பது கிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம் பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல், ஆக, நம்முடைய ஆத்தும ஆதாயப் பணியை சிலுவையிலிருந்து தொடங்க வேண்டும். தேவனுடைய கிருபையையும் அவருடைய குமாரனின் மரணத்தையும் பிரசங்கிக்க வேண்டும். இது தான் மக்களுடைய மனதை மாற்றவல்லது. தேவனுடைய அன்பும் கிறிஸ்து தம்முடைய இன்னுயிரை நம்முடைய பாவங்களுக்காக விட்டதும் தான் மக்களுடைய உள்ளத்தைத் தொடும். அதனாலன்றோ **“நான் பூமியிலிருந்து உயர்த்தப்படும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்”** என்றார் இயேசு (யோவான் 12:32) அப்போஸ்தலர்கள் எல்லா சமயங்களிலும் கிறிஸ்துவையும் அவருடைய சிலுவையையுமே பிரசங்கித்தார்கள். அப்போஸ்தலன் பேதுரு பெந்தேகொஸ்தே நாளில் கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் உருக்கமாகவும், உள்ளத்தை தொடும் வகையிலும் பிரசங்கித்தார். **நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார், என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவீர்கள்** என்று கூறியதைக் கேட்டு “சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும், என்று இருதயத்தில் குத்தப்பட்டுக் கேட்டனர். (அப் 2:36, 37)

ஆகவே, இரட்சிப்பின் திட்டத்தில் தேவனுடைய பங்கும், மனிதனுடைய பங்கும் இருக்கிறது. ஒன்றை வலியுறுத்தி மற்றொன்றை புறக்கணிப்பது தேவனுடைய கட்டளைகளை மாமிசமும் மனசும் விரும்புகிற வகையில் பின்பற்றுவதும், போதிப்பதும், தேவ சித்தத்தைப் புறக்கணித்து விட்டு சுய இஷ்டத்தை நிறைவேற்றுவதுமாகும். கடைசி காலத்தில் நியாயம் தீர்க்கிறது ஒன்று இருக்கிறது. அது கிறிஸ்து சொன்ன வசனமே. (யோவான் 12:48).

## நினைவாக



***திருமறை ஆசான்*** *மாத இதழின் நிறுவன ஆசிரியர்*

**சகோ. E.Z. செல்வநாயகம்** *அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்து 09-02-2005 துடன்* ***12 ஆண்டுகள்*** *நிறைவடைகிறது. அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.*

- ஆசிரியர்.

# நல்லொழுக்கம் மிகுந்த வாழ்க்கை இரட்சிப்புக்கு போதாது ஏன்?

நீங்கள் ஏற்றுக்கொள்ளுகிறீர்களோ இல்லையோ, அநேக மக்கள், தங்கள் சொந்த நற்காரியங்களினாலே இரட்சிக்கப்பட முயற்சிப்பதால் இழந்துபோகிறார்கள் என்பது உண்மை. இது, இயேசு ஆண்டவரிடம் நித்திய ஜீவன் பெற நாடி வந்த இளைஞனை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. நாம் மத்தேயு நூலில் வாசிக்கையில், "அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு: கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக் கொண்டிருக்கிறேன்; இன்றும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரக்குக்கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ள வனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்ட பொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான். (மத்தேயு 19:16-22).

மேலே நாம் பார்த்த நிகழ்வு பழைய ஏற்பாடு அமுலில் இருந்த போது நடைபெற்றது. வேறு விதமாகச் சொன்னால், பழைய பிரமாணம் யூதர்களை கட்டுப்படுத்தியது, ஆகவே இயேசு அந்த பிரமாணம் என்ன சொன்னதோ அதன்படி சொன்னார். இயேசு அவனிடம் நீ இந்த கட்டளைகளை கைகொள்ள வேண்டுமென்று சொன்னபோது, அவன் தன் சிறு வயது முதல் அதை கைகொண்டதாக கூறுகிறான். அக்கட்டளைகளை அவன் கைக்கொண்டிருப்பதை நாம் எண்ணிப்பார்க்கயில், அவன் நல்ல

ஒழுக்கமுடையவனாக இருந்திருக்கிறான். வேறு வகையாகச் சொன்னால், அவன் எந்த வகையிலும் தீமையானவனோ அல்லது பொல்லாதவனோ அல்ல. தான் பரலோகம் போக தகுதி பெற்றவன், ஆண்டவரின் அட்தாட்சி கிடைத்தால் போதும் என்று நினைத்திருக்க அதிக வாய்ப்புண்டு. ஆனால் அந்த விஷயத்தில் அது போதுமானது அல்ல. இயேசு அவனுடைய உள்ளத்தில் உள்ளதையும் அவன் வாழ்க்கையையும் கண்டு ஏதோ ஒரு தடையிருப்பதை அறிந்தார். அவன் ஐசுவரியமுள்ள வாலிபன் ஆகையால் தன் நம்பிக்கையை அதில் வைத்திருக்கிறான். ஆகவே, இயேசு ஆண்டவர், உனக்குண்டானதை விற்று தரித்திரருக்கு கொடு என்றார். அதின் பின்பு ஒரு சோகமான காரியம் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் மிகுந்த ஐசுவரியமுள்ளவனாக இருந்ததால் துக்கத்தோடே திரும்பப்போனான் என்று வாசிக்கிறோம். நல்ல ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை மட்டுமே ஒருவனை இரட்சிக்காது.

கொர்நேலியு, அவன் வீட்டாருடைய சம்பவம், இதற்கு மேலும் ஒரு நல்ல உதாரணமாக உள்ளது. கொர்நேலியு ஒரு புறதேசத்தான். இரணுவத்தில் அவன் ஒரு முக்கிய பதவி வகித்தான், அதாவது நூற்றுக்கதிபதியாக இருந்தான். வேதமும் அவனைப் பற்றி கூறுகையில், "அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான் என்கிறது (அப். 10:2) அப்படியிருந்தும் அவன் இழந்துபோனவனாக காணப்பட்டான் கர்த்தர் இடைப்பட்டு, கொர்நேலியுவையும் அவன் வீட்டரையும், பேதுருவோடும், அவனோடு சில சகோதரர்களோடும் கூடி வரச் செய்தார். அப்பொழுது பேதுரு பிரசங்கிக்கத் தொடங்கினான், உடனே பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மீது இரங்கினார். யூதர்களுக்கு சுவிசேஷம் முதலில் உரைக்கப்பட்டது போல புறதேசத்தாருக்கும் உரைக்கப்பட்டு தேவனால் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள் என காட்டவே அப்படி இரங்கினார். அப்பொழுது பேதுரு கேட்டார், ... நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள்.

இப்பொழுது கொர்நேலியுவின் வாழ்க்கையை நாம் கவனித்தால், இவனும் தேவ பக்தியுள்ளவர்கள், தன் வீட்டரோடு தேவனுக்கு பயந்தவர்கள், தரித்திரருக்கு இரங்குகிறவர்கள் ஆகியவர்களின் பட்டியலில் இடம் பெறலாம். ஆனால் கொர்நேலியு இழந்தவனாக காணப்பட்டான்.

ஆகவே தான், அவன் சுவிசேஷத்தை கேட்கவும், அதை விசுவாசிக்கவும், இரட்சிக்கூப்பட அதற்கு கீழ்ப்படியவும், கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படவும் வேண்டியதாயிருந்தது. அவன் அதை செய்ய மறுத்திருந்தால், அவன், அத்தனை நன்மைகள் செய்த போதிலும் இழந்தவனாக இருந்திருப்பான்.

இரட்சிக்கப்பட ஒழுக்கம் மிகுந்த வாழ்க்கை அவசியம் என்பது உண்மைதான். அதாவது, தீமையும், தவறான காரியமுமானவைகளை விட்டு விலக வேண்டும். அது மாத்திரமல்ல இவ்வுலகத்து செயல்களை நாமும் செய்ய கூடாது அல்லது மாம்சத்தின் கிரியைகளை நாம் ஒழிக்க வேண்டும். பவுல் கொரிந்தில்லுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில், "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசி மார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (1 கொரி 6:9,10) என்கிறார். உலகத்தான் போல் செயல்பட்ட சகோதரன்னோடு கொரிந்து சபையார் கொண்ட உறவு பற்றி எழுதுகையில், "விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன். ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபச்சாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப்போக வேண்டிய தாயிருக்குமே, நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயவது, பொருளாசைக் காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக் கூடாது; அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங் கூடாது என்கிறார்" (1 கொரி. 5:9-11) இவ்வுலகத்தில் நாம் இருக்கையில், இவ்வுலகத்தாரோடு பழகாமல் இவ்வாழ்க்கையை நாம் நடத்த முடியாது. ஆனால் ஒரு சகோதரன் உண்மையற்றவனாக இருந்தால் அவன் இவ்வுலகத்தானைப் போல வாழ்ந்தால், அவனோடு நாம் சம்பந்தம் கலவக் கூடாது.

கலாத்தியா நாட்டுச் சகோதரருக்கு பவுல் எழுதுகையில், "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம் விக்கிரகாராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள்,

கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே, இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். (கலாத். 5:19-21) இப்படிப்பட்ட பாவமான காரியங்களை செய்து கொண்டு ஒருவன் தேவனுடைய இராஜ்யத்திற்குள்ளாக அல்லது கர்த்தருடைய சபைக்குள்ளாக பிரவேசிக்க முடியாது. கிறிஸ்தவர்களாக இருக்கும் ஒருவன் இப்படிப்பட்ட பாவமான வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டு தேவனுக்கும் பிரியமாக வாழ முடியாது. இவைகளை செய்யாமல் இருப்பதினாலேயே ஒருவன் இரட்சிக்கப்படுவான் என்று நம்மால் சொல்ல முடியாவிட்டாலும், தேவன் எதிர்பார்கிற ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்கு பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றிலிருந்தும் விலகவேண்டும் (1 தெசலோ 5:22).

சிலரோ, ஒரு கிறிஸ்தவனுக்கு, மற்ற மதத்தாரைக் காட்டிலும் ஒழுக்கச் சுதந்திரம் இருப்பதாக நினைக்கிறார்கள். அவர்கள் ஒரு கிறிஸ்தவன் புகை பிடிக்கலாம், போதை ஊட்டக் கூடிய பானங்களைக் குடிக்கலாம், ஒழுக்கக் கேடான காரியங்களில் ஈடுபடலாம், கெட்ட வார்த்தைகளை பயன்படுத்தலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் வேதம் எப்படி போதிக்கிறது என்றும், ஒரு கிறிஸ்தவனாக இருப்பதென்றால் என்னவென்றும் அறிந்தவர்கள் இப்படி எண்ணமாட்டார்கள். சிலர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொண்டு இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டு தேவனுக்கு பிரியமில்லாமல் நடக்கின்றனர். அவர்கள் மனந்திரும்பவில்லை என்றால் இழந்துபோவார்கள். ஒருவன் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்தவனாவதற்கு, அவன் தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் வைப்பதோடல்லாமல், தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு பாவங்கள் போக கழுவப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும். அப்படி ஒருவன் செய்யும் போது மாத்திரமே, கர்த்தர் அவனை இரட்சித்த அவருடைய ஒரே சபையில் சேர்ப்பார். ஒரு கிறிஸ்தவனாக, அவன் ஜீவ கீரிடத்தைப் பெற முடிவுபரியந்தம் நிலைநிற்க வேண்டும், இவைகளை நாம் வேதத்தில் பல இடங்களில் வாசிக்கிறோம். (மாற்கு 16:15,16; அப். 2:38; மத். 10:32; அப். 2:47; வெளி 2:10)

ஒருவன் நல்ல ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, தனது நல்வாழ்க்கையால் தான் இரட்சிக்கப்பட்டதாக எண்ணலாம். ஆனால் அவரும் துன்மார்க்கரைப் போலவே, இரட்சிக்கப்பட கர்த்தருக்கு கீழ்ப்படிய வேண்டும். ஒருவனுடைய நல்வாழ்வு மாத்திரம் அவனை இரட்சிக்காது. ஒருவன் சுயநீதிக்கிரியையை செய்வதின் மூலமாக தன்னை இரட்சிக்க முடியாது (எபேசி. 2:8,9; தீத்து 3:5) ஒருவன் தன் நற்காரியங்களை செய்வதின் மூலம் இரட்சிக்கப்படலாம் என்று நம்பினால் அந்த

பாவத்திலிருந்து அவன் மனந்திரும்ப வேண்டும். பவுல் சொல்கிறார் எல்லாரும் பவாம் செய்தோம் என்று (ரோமர். 3:23) ஆகவே தான், இழந்துபோனதை தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் இவ்வுலகத்திற்கு வந்தார் என வாசிக்கிறோம். (லூக்கா 19:10) இல்லை, மனுஷர்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டதால் அவர் மரிக்கவில்லை, மனிதன் இரட்சிக்கப்படுவதின் அவசியத்திலிருந்ததினால் அவர் மரித்தார் பவுல் கூறினார் நமது பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்று (1 கொரி. 15:1,4). பேதுரு சொல்லும் போது, "ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார்.; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். (1 பேதுரு 3:18)

என் நண்பனே நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா? அப்படியானால், எப்படி இரட்சிக்கப்பட்டாய்? நல்ல ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வதின் மூலம் பரலோகம் போகலாம் என எண்ணுகிறவர்களில் நீங்களும் ஒருவரா? நீங்கள் உங்கள் நம்பிக்கையை உங்கள் மீதும், உங்கள் பணத்தின் மீதும், ஏதோ ஒரு மனிதன் மீதும், மனித அமைப்புகள் மீதும் கொண்டிருக்கிறீர்களா? அப்படியானால், நீங்கள் அதை செய்யக்கூடாது என்று உணருங்கள். கிறிஸ்துவைத் தவிர வேறு ஒருவரும் உங்களை இரட்சிக்க முடியாது. அவருக்குக் கீழ்ப்படிந்து, மரண பரியந்தம் உண்மையாக வாழ்ந்தால் அவர் நம்மை இரட்சிப்பதாக மாத்திரம் வூாக்களிக்காமல், பரலோகத்தில் ஒரு வீட்டை கொடுக்கிறேன் என்றும் வாக்களித்திருக்கிறார். வேதாகமமும், கிறிஸ்தவமும் நமக்கு இவைகளைத் தான் தருகிறது.

அநேக நாட்களுக்கு முன்பாக தேவனுடைய தீர்க்கன் அன்றும், இன்றும் பொருந்தும் ஒரு கொள்கையை எழுதினார், "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரேமியா 10:23) இதை ஒத்துக்கொள்ள மனத்தாழ்மை அவசியம், ஆனால் ஒருவன் இதை செய்யும்போது ஞானியாகிறான்.

மீண்டுமாக, நீங்கள் யாராக இருந்தாலும், உங்கள் வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தாலும், நான் உங்களை ஊக்குவிப்பதெல்லாம் இரட்சிக்கப்படுவதற்காக தேவனுக்கு கீழ்ப்படியுங்கள். அப்படியிருந்தால் மாத்திரமே நீங்கள் இரட்சிக்கப்பட முடியும் (மாற்கு 16:16) அப்படியிருந்தால் மட்டுமே அவருடைய சபையிலே கிறிஸ்து உங்களை சேர்ப்பார். (அப். 2:47)

**J.C. CHOATE** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# இருதயத்தை ஊற்றினாள்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே, மீண்டுமாக இம்மாதம் இக்கட்டுரையின் மூலம் உங்களை சந்திக்க தேவன் செய்த மகா பெரிய ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் **"முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவரது நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும்"** (மத். 6:33) என்று, தமது மலைப் பிரசங்கத்தில் கூறினார் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து, புதிய ஏற்பாட்டில் கூறப்பட்ட இந்த வசனத்தை தன் வாழ்க்கையில் நிறைவேற்றினாள், மிகுதியான விசாரத்தினாலும், கிலேசத்தினாலும் நிறைந்திருந்த அன்னாள் 1 சாமுவேல் முதலாம் அதிகாரத்தில் எப்பிராயீம் மலைத் தேசத்திலிருக்கிற சோப்பீம் என்னப்பட்ட ராமதாயீம் என்ற ஊரில் வாழ்ந்த மனிதன் பெயர் எல்க்கானா அவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். ஒருத்தி பேர் அன்னாள் மற்றவள் பேர் பெனின்னாள். பெனின்னாளுக்கு பிள்ளைகள் இருந்தார்கள். அன்னாளுக்கோ பிள்ளை இல்லை. இந்த சம்பவத்தை ஏறக்குறைய வேதாகமத்தை படித்த ஒவ்வொருவரும் அறிந்தேயிருக்கிறோம் வேதாகமத்தின் காலத்திலும் பிள்ளை இல்லாத நிலை இருக்கவே செய்தது. **கர்த்தரோ அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார்** (1 சாமு: 1:5) என்று வாசிக்கிறோம். அன்னாளின் வாழ்க்கையில் ஒரு குறை இருந்தது. "குறை" என்பது அதை அனுபவிக்கிறவர்களுக்குத் தான் புரியும். தெரியும். குறையினால் ஏற்பட்ட துக்கத்தையே தாள முடியாமல் இருந்த அவளுக்கு தன் வீட்டிற்குள்ளேயே எள்ளி நகையாடுதல், நிந்தை, அவமானம் எல்லாமே இருந்தது. இத்தனைக்கும் மத்தியில் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த அன்னாள் நமக்கு சில பாடங்களை கற்றுக் கொடுக்கப் போகிறாள்.

## முதலாவதாக அன்னாள் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள் :-

10-ம் வசனத்தில் **"அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி என்று பார்க்கிறோம்."** தன் குறைவை போக்க ஒரே வழி சேனைகளின் கர்த்தர் தான் என்று உறுதியாக நம்பி விட்டாள் இந்த அன்னாள் தன் கணவரிடம் சொன்னால் பிரச்சனைக்கு விடை கிடைக்கும் என்று அவள் எண்ணவில்லை. தன் உற்றார், உறவினர்களிடம் போய் முறையிடவுமில்லை. சரி தேவலாயத்தில் வந்து,

வாசலண்டை உட்கார்ந்திருந்த ஏலியிடம் போய் தன் குறையை சொல்லி, அதைத் தீர்த்து வைக்கும்படியாக மன்றாடவில்லை. **நாசியில் சுவாசமுள்ள மனிதனை நம்ப வேண்டாம். எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்** (ஏசாயா 2:22) என்ற வசனத்தின்படியாக அன்னாள் மனிதரண்டைக்குச் செல்லவில்லை. ஆனால், கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே இன்றைக்கு கிறிஸ்தவ மார்க்கத்தில் பெண்களின் நிலை எவ்வாறு இருக்கிறது? பொய்யான உபதேசங்களும், பொய்யான அற்புதங்களும் எங்குபார்த்தாலும் தழைத்தோங்குவதற்கு காரணமாக இருப்பவர்கள் பெண்கள் தான். வேதாகமத்தின் துணை கொண்டு பார்த்தால் இதை நாம் ஒத்துக் கொண்டேயாக வேண்டும். வீட்டில் பிரச்சினை, கடன் தொல்லை, வேலையில்லாத் திண்டாட்டம், திருமணம் தள்ளிப் போதல் இப்படி பல காரியங்களுக்கும் மனிதர்களையே சார்ந்திருக்கிறார்கள். ஊழியர்களுக்கு பணம் அனுப்பி ஜெபிக்கச் சொல்வது, பாஸ்டர்களையே தெய்வம் போல் நினைப்பது இப்படி பல உபதேச கோளாறுகள் தோன்ற பெண்களே காரணமாகி விடுகிறார்கள். அன்னாள் நினைத்திருந்தால், ஏலியின் காலில் விழுந்து அழுது, காணிக்கை செலுத்தி தன் குறைக்காக ஜெபிக்கச் சொல்லியிருக்கலாம். ஆனால் அவள் அப்படிச் செய்யவில்லை. வார்த்தையால் உலகத்தை உண்டாக்கிய தேவனின் வல்லமையையும், மகத்துவத்தையும், சிருஷ்டிக்கும் திறன் அவர் ஒருவருக்கே தான் சொந்தம், எந்த சிருஷ்டியும் அதற்கு தகுதியல்ல என்பதை அன்னாள் உணர்ந்திருந்தாள். நாமும் அன்னாளைப் போல எந்தக் காலத்திற்கும் தேவனையே சார்ந்திருப்போம் தேவனால் தான் எல்லாம் கூடும் இயேசு கிறிஸ்து பிதாவின் சித்தத்துக்கு தம்மை ஒப்புக் கொடுத்தது போல நாமும் அவர் சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்போம்.

**இரண்டாவதாக, நாம் அன்னாளிடம் பார்த்து கற்றுக்கொள்வது அன்னாள் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தாள். (1 சாமு : 1:15)**

அன்னாள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம் பண்ணினாள் என்று (வச :12) வாசிக்கிறோம் தன் இருதயத்தில் தேவனோடு பேசினாள். வெகு நேரம் அவள் உதடுகள் அசையும் ஜெபத்தை பார்த்த ஏலி இவள் குடித்து, வெறித்திருக்கிறாள் என்று நினைத்து விடுகிறான். அதை அறிந்த அன்னாள் “**அப்படியல்ல, என் ஆண்டவனே நான் மனக்கிலேசமுள்ள ஸ்தீரி நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன் உம்முடைய அடியாளைப் பேலியாளின் மகளாக எண்ணாதேயும். மிகுதியான விசாரத்தினாலும், கிலேசத்தினாலும் இந்நேரம் மட்டும் விண்ணப்பம்**

**பண்ணினேன்"** என்று சொல்கிறாள். கிறிஸ்துவுக்குள் பிரியமான தாய்மார்களே, வாலிபப் பெண்களே, இதை வாசிக்கும் போது மெய் சிலிர்ப்பதோடு, பெருத்த ஆறுதலும் கிடைக்கிறதல்லவா? நாமும் அன்னாளைப் போல் மன கிலேசத்தினால் நிறைந்திருக்கிறோம். மிகுதியான விசாரங்களும் நம்மிடத்தில் உள்ளது. இதை போக்கவும் இதிலிருந்து மீட்பு பெறவும் என்ன வழி? மனிதர் பின்னால் போக வேண்டாம். மனிதர்கள் பிரச்சனையை பெரிது படுத்துவார்களேயல்லாமல் அதை தீர்த்து வைக்க அவர்களால் இயலாது அன்னாள் வெகு நேரம் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்திருக்கிறாள். இன்றைக்கு நம்முடைய விண்ணப்பமெல்லாம் எப்படி உள்ளது. போகிற போக்கில் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். தன்னையே வெறுமையாக்கி, கண்ணீர் விட்டு, அழுது, புலம்பி, தன் நிந்தையை தேவனிடத்தில் சொல்லி, கெஞ்சி, மன்றாடி, அங்கலாய்த்து, பெலனிழந்து போகுமட்டும் அவர் சமூகத்தில் கிடந்து, என்னை நினைத்தாலேயொழிய உம்மை விடமாட்டேன் என்று போராடி, தவித்து, நிலைகுலைந்து, உம்மை தவிர என் பிரச்சினையை தீர்க்க யாருமில்லை, என் குறையை நிறைவாக்க உம்மாலேதான் ஆகும் என்று அழுது புரண்டு ஜெபித்திருக்கிறாள் இந்த அன்னாள்.

அவள் துள்ளி, துடித்ததை பார்க்க சகிக்காத அன்பும், இரக்கமும், கருணையும் நிறைந்த நம்முடைய தகப்பன் **அவளை நினைக்கிறார்.** 1:19-ல் பார்க்கும் போது கர்த்தர் அவளை நினைந்தருளினார் என்று உள்ளது. அன்னாளின் ஜெபம் கர்த்தர் அவளை **நினைக்கும்படியாக** செய்தது. இன்றைக்கும் இது நமக்கு எவ்வளவு ஆறுதலை கொடுக்கிறது! கர்த்தர் நம்மை நினைத்தால் தான் நம் பிரச்சினைக்கு வழி கிடைக்கும். அதற்கு ஒரே வழி, அன்னாளைப் போல **இருதயத்தை ஊற்ற வேண்டும்.** நம்மை ஒன்றுமில்லாமையாக்கி, வெறுமையாக்கி, நம்மை சரணாகதியாக்கி அவர் சமூகத்தில் கிடக்க வேண்டும். மணிக்கணக்காக அவரிடம் ஜெபிக்க வேண்டும். போகிற போக்கில் குறை தீர்ந்து போகாது. பொய்யுரையாத தேவன் நிச்சயம் நம் குறைவுக்கு ஒரு வழி வைத்தே இருப்பார். இதையே பவுலடியார் குறிப்பிடும்போது **"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்"** (பிலி. 4:6) என்று சொல்லுகிறார். நம் அன்னாளுடைய அங்கலாய்ப்பான ஜெபத்தை பார்க்கும் போது நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் சிலுவைப்பாடுகளை சந்திக்கப்போகுமுன், **முகங்குப்புற விழுந்து, அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுமளவுக்கு,**

**வியாகுலப்பட்டு**, தன் தகப்பனை நோக்கி ஜெபித்தாரே அந்த சம்பவம் தான் நினைவிற்கு வருகிறது.

அன்பான சகோதரிகளே! நாம் இப்படி ஜெபிக்கிறோமா? நம்முடைய குறையை தீர்க்க நமதாண்டவர் தயாராக இருக்கிறார். ஆனால் நம் குறை நிவர்த்தியாகாமல் குறையாகவே இருப்பதற்கு காரணம் நாம்தான். நம்மை வெறுமையாக்க வேண்டும். நம்மை சுற்றியுள்ளவைகளை பொருட் படுத்தாமல், யார் பார்த்தால் என்ன, என்ன நினைத்தால் என்ன, என்னை நான் தேவனுக்கு ஒப்புக் கொடுப்பேன் அவரால்தான் எனக்கு மீட்பு என்று தீர்மானம் செய்து அவர் பாதத்தில் விழுந்து விடுவோமானால் நிச்சயம் அவர் **நம்மை நினைத்தருள்வார்.**

## மூன்றாவதாக நாம் அன்னாளிடம் காண்பது, அன்னாள் தன் பொருத்தனையை நிறைவேற்றினாள் :

**"இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார். ஆகையால் அவள் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக் கொடுக்கிறேன் என்றாள்"** (1சாமு: 1:27,28). அன்னாள் எவ்வளவு நன்றியுள்ளவள் என்பதை இவ்வசனங்கள் நமக்கு காட்டுகிறது. அநேக சமயங்களில் நாம் கர்த்தரிடத்தில் ஒரு காரியத்திற்காக கேட்போம். அது கிடைத்தவுடன் தேவன் இதை கொடுத்தார் என்பதை மறந்து விட்டு, ஏதோ நம்முடைய சாமார்த்தியத்தினாலும், நம்முடைய தகுதியினாலும் இயற்கையாக எல்லோருக்கும் கிடைப்பது எனக்கும் கிடைத்திருக்கிறது என்று கணக்கப் பேசி தேவனை மறந்துவிடுகிறோம். நீண்ட நாள் தவமிருந்து கிடைத்த பிள்ளையை ஒரு தாய் தன்னோடு வைத்துக் கொண்டு, சீராட்டி, பாராட்டி, தன்னருகில் அவனை வைத்து, கிரகித்து, அழகுபார்த்து வளர்க்க வேண்டும் என்று எந்தத் தாய் தான் ஆசைப்படாமல் இருப்பாள். ஆனால் நம் அன்னாளோ, இவை எல்லாவற்றையும் தேவன் மீது போட்டு விட்டு தேவனுக்காக அவனை ஒப்புக் கொடுத்து விட்டாள்.

இன்று கிறிஸ்தவ தாய்மார்கள் நம்முடைய பிள்ளைகளை தேவனுடைய காரியங்களிலும், சபைக்கடுத்த காரியங்களிலும் ஈடுபட செய்கிறோமா? நமதாண்டவரரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்றுவதில், "நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே

அவர்களுக்கும் ஞானஸ்நானங் கொடுங்கள்" (மத் : 28:19) நம் பிள்ளைகளும் பங்கு வகிக்க வேண்டும் என்று விரும்புகிறோமா? அல்லது யாரோ ஒருவருடைய வேலை நமக்கென்ன? என்று சுயநலமாயிருந்து விடுகிறோமா? உலகத்திலே நமக்கு கிடைத்திருக்கும் அனைத்து ஆசீர்வாதங்களும் தேவனால் கொடுக்கப்பட்டவை. அவைகளை அவருக்காக பயன்படுத்துவோம். அன்னாள் சுயநலம் பாராட்டி தன் மகனை தானே வளர்த்திருப்பாளானால், இஸ்ரவேல் ஜனங்களின் காலத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தின சம்பவமான நியாயதிபதிகளுக்கும், இராஜாக்கள் காலத்திற்கும் இடையே தோன்றின ஒரு மகா மனிதனாகிய சாமுவேல் தீர்க்கதரிசியை பெற்றிருந்திருக்க முடியாது. ராஜாக்களை ஏற்படுத்தும் வேலையை சாமுவேல் தீர்க்கதரிசிக்கு தேவன் கொடுத்தார். எனவே நம்முடைய பிள்ளைக்கும் பின்னாளில் ஆசீர்வாதமாகவும், தேவனுடைய வேலையில் தங்களை இணைத்துக் கொள்ளும் பாக்கியத்தை பெறவும் அவர்களை தேவனின் பணிகளுக்கும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மரித்து, இரத்தத்தை சிந்தி சம்பாதித்த ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபைக்கும் பணி செய்ய அவர்களை ஒப்புக் கொடுப்போம்.

ஆக, இம்மாதம் அன்னாளைக் கொண்டு நாம் கற்றுக் கொண்ட பாடங்களை நாமும் கைக் கொண்டு நம்மையும், நம் பிள்ளைகளையும் அவருடைய ராஜ்ஜியமாகிய சபையின் பணிக் கென்று முற்றிலும் ஒப்புக்கொடுப்போம். அப்படிச் செய்ய பரலோகத்தின் தேவன் உதவி செய்வாராக! ஆமென் !!.

**ரேச்சல் இராஜநாயகம்**


## ஆசிரியர் தேவை

**காங்கயம், கிறிஸ்துவின் சபையாரால் நடத்தப்படுகிற எக்லீசியா வேதாகமக் கல்லூரியில் முழு நேர ஆசிரியர் பணி செய்ய, புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் பிடிப்பும், ஆங்கில புலமையும் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

**இயக்குநர்**
எக்லீசியா வேதாகமக்கல்லூரி

வாலிபர் பகுதி

# உனக்கு உண்டானதைப் பற்றிக்கொண்டிரு

ஒரு மாணவன் மணியை கணக்குப்பார்க்காமல், உறக்கத்தோடு அதிகமாக உறவாடாமல் கண் விழித்து, கருத்தாய் படித்து, படித்ததை தன் மனதிலே பத்திரப்படுத்தி, தேர்வு வரும் வேளையில், தான் படித்தவைகளை, தாள்களில் பக்குவமாய் பதிவு செய்து, மதிப்பெண்கள் பெற்று, வகுப்பிலேயே முதல்வனாக வந்துவிடலாம், ஒரு விளையாட்டு அணி, அதன் கடின உழைப்பாலும், அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட வீரர்களின் திறனாலும், அணியின் ஒற்றுமையாலும், வெற்றி பெற்றேயாக வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தாலும், அதற்கான செயல்பாட்டாலும் குவலயத்தில் முதன்மையான இடத்தை எட்டிப்பிடித்து விடலாம். இப்படி ஒரு தனிநபரோ அல்லது ஒரு குழுவோ முதலிடம் அடையலாம், ஆனால் அவ்விடத்தை தக்கவைத்து கொள்ளுவதுதான் அவ்விடத்தை அடைவதைக் காட்டிலும் கடினமானது என்பதை நீங்களும் என்னுடன் சேர்ந்து எண்ணுவீர்கள் என திடமாக நம்புகிறேன்.

தன்னுயிர் தன்னை ஈந்து சருவ லோகத்திலுள்ள மன்னுயிர்களை மீட்க மாந்தராய் பிறந்தவர், பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்து சிறந்தவர் சிலுவையில் நமக்காய் மரித்து, மூன்றாம் நாள் உரைத்தபடி உயிர்த்தெழுந்த இயேசு ஆண்டவர், நரர்லோகம் விட்டு பரலோகம் சென்ற பின் தனது ஆவியானவரைக் கொண்டு வெளிப்படுத்தின விசேஷத்தின் மூன்றாம் அத்தியாயம் பதினொன்ராம் வசனத்தில், "**.... *ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு*"** என்று பிலதெல்பியாவில் உள்ள கிறிஸ்துவின் சபைக்கு எழுதுகிறார். நீ கிரீடத்தை அடைந்து விட்டாய், ஆனால் அதை தக்க வைத்துக்கொள் என்றுதானே கன்னியிடம் பிறந்த மனிதகுலக் காவலனாம் கர்த்தர் இயேசு கூறுகிறார். வாலிபர்களாகிய நாமும் நமக்கு என்ன கிரீடங்கள் இருக்கிறது என்பதைக் கண்டு அதை தக்க வைத்துக் கொள்ள இம்மாதம் இம்மாமுயற்சியை மேற்கொள்வோம். வாரீர் !

## நீதியின் கிரீடம்

கமாலியேலின் பாதத்தில் முன்னுரை நூலை தன் எண்ணத்தில் நிறைத்து, கர்த்தரின் கட்டளைகளை கற்ற பவுல் தேவ வைராக்கியத்தினால் புதிதாய் பிறந்த மார்க்கமான கிறிஸ்தவத்தை துன்பப்படுத்தினான், இது இறைவனால் உண்டான வழி என அறியாமல் அப்படிச் செய்தான், ஆனால் முன்னவர் இயேசு விண்ணுலகத்திலிருந்து தமஸ்குவின் சாலையில்,

பவுலை சந்தித்த பின், அவன் நிலை தலைகீழாக மாறியது. எந்த வழியை அழித்தானோ அதே வழியை எங்கும் திரிந்து பிரசங்கம் பண்ணினான். இயேசுவுக்காய் சொல்லொண்ணா துன்பப்பட்டான், இறுதியில் இறைவனை அறிவித்ததற்காக சிறையின் அறையில் அடைக்கப்பட்டான், அங்கிருந்து தன் வாழ்வின் இறுதியில் விசுவாசத்தில் தன் உத்தம குமாரனுக்கு எழுதினதை நான் எழுதுகிறேன் படியுங்கள், "***இது முதல் நீதியின் கீரிடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்***" (II தீமோத். 4:8)

சரித்திரத்தின் நடுநாயகமாகிய இயேசு பரனைப் பற்றி, பிரசங்கித்து, பிசாசின் அரண்களை நிர்மூலமாக்கி, ஜனங்களைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து இயேசு ராஜாவின் நாமத்தில் விடுதலையாக்கின அப்போஸ்தலன் பவுல், தனக்கு நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருப்பதாக கூறுகிறார், ஆனால் அதின் முந்திய வசனத்தில், "***நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்***" என்கிறார் (II தீமோத். 4:7) அவர் இக்கிரீடத்தைப் பெற மூன்று காரியங்களை செய்திருக்கிறார். தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை எடுத்து அந்தகார லோகாதிபதியோடும், வானமண்டல சேனையோடும் போராடியிருக்கிறார் (எபே. 6:10-16) அவர் கிறிஸ்தவப் போராட்டத்தைக் குறித்துச் சொல்லுகையில் அது மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது (II கொரி. 10:4) என்கிறார்.

இரண்டாவதாக, அவர் விளம்புகையில், கிறிஸ்தவத்தை ஓர் ஓட்டத்திற்கு ஒப்பிட்டு அதை நன்றாய் ஓடினேன், அந்த நெடுந்தூரப் பயணத்தை வெற்றிகரமாக ஓடி முடித்தேன். முடிப்பதோடல்லாமல் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் என்றும் உரைக்கிறார், நாமும் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து, பிசாசுக்கு எதிர்த்து நின்று, இயேசு நமக்கு கொடுத்த விசுவாசமாகிய சுவிசேஷத்தை காத்துக்கொண்டால் அப்போஸ்தலன் பவுல் தேவ ஆவியினால் ஏவப்பட்டு கூறுகையில், அக்கிரீடம் இயேசுவின் வருகையை விரும்புகிறவர்களுக்கும் கிடைக்கும் என்கிறார். அதுதான் நமக்கு ஆனந்தத்தை அள்ளித் தருகிறது. நியாயத்தீர்ப்பு நாளிலே நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசு நமக்குத் தந்தருள்வார். ஆகவே, எனக்கன்பானவர்களே இவைகளை நாம் செய்து நீதியின் கிரீடத்தை இறுதியில் பெற முயற்சிப்போம்.

## ஜீவ கிரீடம்

விசுவாசிக்கிற மனுஷன் எப்படி இருப்பான் என்பது பற்றி மிகத் தெளிவாக, உலகமெங்கும் சிதறியிருந்த கிறிஸ்தவர்களுக்கு யாக்கோபு தன் பொதுவான நிருபத்தை வடிக்கையில், "***சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான், அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில்***

***அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்***" (யாக்கோபு 1:12) என்கிறார். எனக்கன்பான வாலிபர்களே! இப்பருவத்தில் புதிய ரகச் சோதனைகள் உங்களை தாக்கும் என்பது உலகறிந்த உண்மை. இறைவனின் வேதம் நமக்கு என்ன சொல்கிறது, சோதனையை சகிக்க வேண்டும்.

எனக்கன்பானவர்களே! சகித்தல் என்றால் ஏதோ நம் வாழ்க்கை இவ்வளவு தான் என்று நினைத்து, சோர்ந்து போய் அச்சோதனையால் வேதனைப்பட்டு, நாட்களை நகர்த்துவதல்ல, அதற்கு மாறாக, அதைத் தாங்கி, அதிலிருந்து வெளியே வரவேண்டும் என்று எண்ணி, பொறுமையாக காத்திருந்து, தேவனிடத்தில் ஜெபம் செய்து, அவர் உதவியால் அச்சோதனையின் கொம்பொடித்து சாதனை புரிய வேண்டும். ஆனால் சில வாலிபர்களோ, தங்களுக்கு வரும் சோதனைக்கு தேவன் தான் காரணம் என நினைப்பதுண்டு. ஆனால், யாக்கோபு ஆசிரியர் அதை குறித்து யாது கூறுகிறார் பாருங்கள், "***சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல***" (யாக் 1:13) என்கிறார். உடனே யௌவன பருவத்திலிருக்கும் உங்கள் உள்ளத்தில் வெடித்துக்கிளம்பும் ஒரு கேள்வியென்னவாயிருக்கும், பின்பு ஏன் எங்களுக்கு சோதனை வருகிறது? என்பதே இக்கேள்வி. விடையை விவிலியம் தருகிறது விளக்கமாக கண்டிடுக. ஆதியிலே ஆதாம் ஏவாள் ஆகிய முதல் தம்பதிகளை சோதித்தவன் பிசாசு, புதிய ஏற்பாட்டில் நமதாண்டவர் இயேசுவையும் அவன் சோதிக்கும்படி வரும்போது வேதம் அவனை எப்படி அழைக்கிறது பாருங்கள், "அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து...." என்கிறது. ஆகவே, மனிதகுலத்தைச் சோதிப்பவன் பிசாசாயிருக்கிறான். முழு பழியையும் அவன் மேல் நாம் போட்டுவிட்டு தப்பிக்க முடியாது!

யாக்கோபு ஆசிரியார் மேலும் சோதனையைப் பற்றி கூறுகையில், "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான் (யாக்கோபு. 1:14) ஆகவே வாலிபர்களே, நமது சிந்தனைகளால், நமது யோசனைகளால் நாம் சிக்குண்டு சோதிக்கப் படுகிறோம். அதற்கு தேவனும் பொறுப்பல்ல, பிசாசும் காரணமல்ல, ஆகவே நாம் பவுல் சொல்லுவது போல், எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் சிறைப்படுத்த வேண்டும். (II கொரி. 10:5) அதாவது கிறிஸ்துவைப் போல சிந்திக்க வேண்டும் (பிலி. 2:5) அதற்கு, அவர் எப்படி சிந்தித்தார், நடந்து கொண்டார் என்று வேதத்தை அனுதினமும் தியானிக்க வேண்டும் (சங். 1:1; அப். 17:11) அப்படி செய்வோம் சோதனையை சகிக்க பெலனைப் பெற்றுக்கொண்டு, நமக்கு உண்டாயிருக்கும் இக்கிரீடங்களை பற்றிக் கொண்டிருப்போம்! ஆமென்.

**ஜே. பிக்கின்ஸ்**

சிறுவர் பகுதி

# தேவனுடன் பிரச்சனைக்குள்ளாகுதல்

எனக்கருமையான சிறுதம்பி, தங்கைகளே, தேவன் நமக்கு அன்பாக கூட்டிக் கொடுத்த இவ்வாண்டின் இரண்டாம் மாதத்தில் உங்களையெல்லாம் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நாம் சிறு பிராயத்திலிருந்தே கர்த்தரை அறிந்த கொள்ள வேண்டும் என்பது தான் தேவனுடைய சித்தமாகயிருக்கிறது அச்சித்ததை நாம் நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளுவோம்! அப்படி செய்யும் போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்பது உண்மை. இம்மாதத்தில் நாம் ஒரு தீர்க்கனைக் கண்டு அவனிடமிருந்து சில பாடங்களைக் கற்றுக்கொள்ளும் வாருங்கள் தம்பிகளே தங்கைகளே!

எசேக்கியல் என்னம் தீர்க்கன் ஒரு முழு புத்தகத்தை எழுதியிருந்தாலும், தன்னைப் பற்றி பெரிதாக அதில் அவன் ஒன்றும் சொல்லவில்லை. அப்புத்தகத்தின் 24ம் அதிகாரத்தில் அவன் மனைவி மரித்துப்போனாள் என்பது மாத்திரம் தெரிகிறது. இந்நூல் ஒரு மனிதனை பற்றி பேசுவதற்காக எழுதப்பட்டதல்ல. என் பாசத்திற்குரியவர்களே! எசேக்கியல் புத்தகம் நீதியும், கோபமும் நிறைந்த தேவனை பற்றி நமக்கு எடுத்துச் சொல்லுகிறது

இஸ்ரவேல் தேசத்து மக்கள் மீண்டும் தேவ பார்வையில் பாவம் செய்தார்கள். ஆகவே தேவன் அவர்களை பாபிலோனியர்களுக்கு அடிமைகளாக கொண்டு போகச் செய்து மன்நதிரும்ப காலத்தை கூட்டிக் கொடுத்தார். நீங்கள் நினைக்கலாம் அய்யோ அடிமைத்தனம் அவர்களை மாற்றியிருக்குமென்று, ஆனால் தம்பிகளே கதை அப்படியல்ல இஸ்ரவேலர்கள் விக்கிரகத்தையும் பொல்லாத வழிகளையும் விடப்பிடியாக பிடித்துக்கொண்டார்கள். அடிகள் ஆரம்பமாக போகிறது என்று அதாவது தண்டனை இன்னும் அதிகரிக்கப்போகிறதென்று பிரசங்கிக்கவே எசேக்கியல் அனுப்பப்பட்டார்.

எசேக்கியல் இஸ்ரவேலர்களை மாத்திரம் எச்சரிக்கவில்லை, ஆனால் மற்ற தேசத்தாரிடமும் அவர் திரும்பி தேவன் உங்களை தண்டிக்கப் போகிறார் என்றுரைத்தார். இஸ்ரவேல் ஜனம் தேவனால் தண்டிக்கப்பட்டதை இத்தேசத்தார் கேலி செய்தார்கள், ஆகவே தேவன்

அவர்களை தண்டிக்கிறார். இஸ்ரவேலும், அதை சுற்றியிருந்த பட்டணமும் தேவனுக்கு கீழ்படியாமல், அவரை அவமதித்து நடந்து வந்தது.



பெரியவர்கள் வேதாகமத்திற்கு கீழ்ப்படியவில்லை என்றால், தேவனுடன் பிரச்சினைக்குள்ளாகுகிறார்கள். நாம் எப்படி இவ்வுலகத்தில் நம் தகப்பன், தாய் சொல்லை கேட்டு நடக்கவிட்டால் பிரச்சினைக் குள்ளாகுகிறோமோ! அதுபோலவே பெரியவர்கள் தங்கள் பரமபிதாவுக்கு கீழ்ப்படியவில்லை என்றால் பிரச்சனைதான். இவ்விரண்டுக்கும் வித்தியாசமென்ன தம்பி தங்கைகளே! தேவன் நீதியாக தண்டிக்கிறார், தண்டிக்கும் வேளையில் இருக்கும் மனநிலையை வைத்தோ அல்லது உணர்ச்சிவசப்பட்டோ தண்டிப்பதில்லை அதுதான் வேறுபாடு.

இப்புத்தகம் நமது வாழ்க்கைக்கான மிகச்சிறந்த செய்திகளை கூறுகிறது.

1. குழந்தைகள் தங்கள் பெற்றோரின் பாவத்தை சுமப்பதில்லை.

2. ஒருவன் தன் வாழ்க்கையின் முதல் கட்டத்தில் நன்றாக வாழ்ந்து பின்பு தேவனுக்கு எதிராக திரும்பினால் அவன் தண்டிக்கப்படுவான்.

எசேக்கியேல் புத்தகம், மனந்திரும்பாதவர்கள் தண்டிக்கப் பட்டார்கள் என்பதோடு முடிகிறது. ஆனால் மனம் மாறியவர்கள் அடிமைத்தனத்திலிருந்து மீண்டும் தங்கள் தேசத்தை சுதந்தரிக்க அனுமதிக்கப்பட்டார்கள். அடுத்த முறை அவர்கள் தேவனுக்கு எதிர்த்து நிற்கும் வரைக்கும். எனக்கன்பானவர்களே! இச்சிறு பருவத்திலிருந்தே நமது பரம தந்தைக்கும், கர்த்தருக்குள் நமது பெற்றோருக்கும் கீழ்ப்படிவோம். தேவ ஆசீர்வாதம் பெறுவோம்!

R. Abel Rodger Nayagam

# வெளிப்படுத்தின விசேஷம் ஒரு கண்ணோட்டம்

**காலம் : சுமார் 81 - 96 கி.பி.**

**ஆசிரியர் : அப்போஸ்தலான யோவான்**

## இந்நூல் பற்றி

1. இந்நூல் உருவக மொழி நடையில் எழுதப்பட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.
2. இந்நூலை வாசிக்கிறவர்கள் மேலும், கேட்கிறவர்கள் மேலும், அதில் எழுதியிருக்கிறதை கைகொள்ளுகிறவர்கள் மேலும் ஆசீர்வதாம் வரும் என்று கூறப்பட்டுள்ளது. (1:3)
3. இந்நூலின் முக்கிய வார்த்தை, "ஜெயங்கொள்ளுகிறவன்", கிறிஸ்தவர்கள் முடிவிலே எல்லாவற்றின் மேலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருப்பார்கள் என்பதே அதன் பொருள்.
4. அப்போஸ்தலனாகிய யோவான், இந்நூலை எபேசுவிலிருந்து தென்மேற்கே 70 மைலில் அமைந்திருக்கும் பத்மு தீவிலிருந்து எழுதினார்.
5. இந்நூலின் நோக்கம், துன்பப்படும் கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் தரும்படி, தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார், அவர் துன்பப்படுத்துகிறவர்கள் மீது ஜெயம் கொள்வார் என்பதை வெளிப்படுத்துவதாகும்.
6. இந்நூல் டோமிசியன் என்ற ரோமப் பேரரசர் ஆண்ட காலத்தில் எழுதப்பட்டது, இவன்தான், உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தின முதல் ரோமர் பேரரசன்.

## இந்நூலின் செய்தி

A. இயேசு, தன் சபையிலே என்ன நடக்கிறது என்பதை அறிந்திருக்கிறார் (1:12,13,20)

B. தேவன் தன் சபையிலே கள்ளப்போதகம் இருப்பதை சகித்துக் கொள்ளமாட்டார் (2:2,9,14,15; 3:9)

C. இந்த பூமியில் என்ன நடந்தாலும் சரி, தேவன் தன் சிங்காசனத்திலிருந்து எல்லாவற்றையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்.

D. ஜீவ கிரீடத்தை நாம் பெற மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். (2:10)

# விசுவாசத்தின் அடிப்படைகள்

மனிதனுடைய பாவப்பிரச்சினை மற்றும் அதற்கான தேவச் தீர்வு என்ற பாடத்தின் கீழ் நாம் இதுவரை படித்தவைகளை தொகுத்துப் பார்ப்போம். பாவம் என்பதற்கான வேதாகம விளக்கம், பாவத்தின் வரலாறு, பாவம் எப்படிக் கிரியை செய்கிறது மற்றும் பாவத்தின் பலன் ஆகியவைகள் குறித்துப் பார்த்தோம்.

மனிதனுடைய பாவம் என்கிற தலையாய பிரச்சினைக்கான தேவனுடைய பதில், பழைய ஏற்பாட்டிலே தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறதென்றும், மனிதர் மீது அவர் கொண்டிருந்த அளவு கடந்த அன்பே அவரை அப்படிச் செய்யும்படியாகச் செய்திருக்கிறது என்றும், நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்க இயேசு பூமிககு வந்தபோது, தேவனுடைய அந்த தீர்க் தரிசனங்கள் நிறைவேறியது என்றும் வேத வசனங்கள்ளைக் கொண்டு பார்த்தோம்.

**<u>கீழ்க்கண்ட கேள்விகளை, அடுத்து நாம் கேட்க விரும்புகிறோம் மனுகுலத்துக்கு இரட்சிப்பு சாத்தியமாகும்படி தேவன் என்ன விலை கொடுத்தார்.</u>**

எபிரெயர் 9:22- வாசிக்கவும், **இரத்தம்** சிந்துதலில்லமல் பாவ மன்னிப்பு இல்லை.

1 பேதுரு 1:18,19 - வாசிக்கவும், நாம் மீட்கப்படும்படியான திட்டத்தை தேவன் ஏற்படுத்தினார் என்ற அழகான உண்மையை இங்கே காண்கிறோம். மீட்கப்படுவதென்றால், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து திரும்பப் பெற்றுக் கொள்வது. அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்படுவதற்குத் தேவையான விலைக் கிரயத்தைக் கொடுக்க ஒருவர் முன்வரும்போது தான் இதைச் செய்ய முடியும். அந்த ஒருவர் தான் இயேசு கிறிஸ்து.

நாம் மீட்கப்படும்படியாக அவர் என்ன விலை கொடுத்தார்? அடிக்கப்படும் ஒரு ஆட்டுக் குட்டியைப் போல, கறைதிரையற்ற விலையேறப்பெற்ற தன்னுடைய சொந்த இரத்தத்தை நமக்காகக் கொடுத்தார். எவ்வளவு பெரிய விலை என்று பாருங்கள்! நம்முடைய மீட்பருடைய விலையேறப் பெற்ற **இரத்தத்தினாலே** மீட்கப்படுவது எப்படிப்பட்ட ஆசீர்வாதமென்று பாருங்கள்!

எபே 1:7 - வாசிக்கவும், நாம் "அவருக்குள்" அதாவது கிறிஸ்துவுக்குள் இருந்தால், பாவத்திலிருந்து மன்னிப்பும், மீட்பும் நமக்குண்டு. அந்த மன்னிப்பையும், மீட்பையும், தேவன் அவருடைய **இரத்தத்தின் மூலமாக** சாத்தியமாக்கி யிருக்கிறார். இவைகளனைத்தும், அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியாக உள்ளது! ஆனால், பாவமன்னிப்பையும் மீட்பையும் பெற்றுக்கொள்ளும்படி அவருக்குள்ளாக வருவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு என்று நாம் கற்றுக் கொள்ளுவோம்.

வெளி 1:5 - வாசிக்கவும், இது எப்படிப்பட்ட ஒரு சிறந்த கருத்து பாருங்கள்! இயேசு நம்மை நேசித்து அவருடைய சொந்த **இரத்தத்தைக்** கொண்டு, நம்முடைய பாவங்களிலிருந்து நம்மைக் **கழுவியிருக்கிறார்.**

பாவத்திலிருந்து கழுவப்படும்படியான அந்த வாய்ப்பு எல்லா ஜனங்களுக்கும் உண்டென்பதை நாம் பார்ப்போம். ஆனால், பாவத்திலிருந்து கழுவப்படுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று தேவன் சொல்லுவதை எல்லா மனிதரும் செய்யமாட்டார்கள்.

**VI** இயேசுவின் இரட்சிக்கும் வல்லமையுள்ள இரத்தத்திலிருந்து நன்மைகளை மனிதன் எப்படிப் பெற்றுக் கொள்ளுகிறான்? (அந்த சுத்திகரிக்கும் இரத்தத்தோடு நாம் தொடர்பு வைத்துக் கொள்ளுவது எப்படி?)

**A.** முதலாவது, இது நியாயப்பிரமாணக் கிரியைகளினாலும், அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட சட்டதிட்டங்களினாலும், பழக்க வழக்கங்களினாலும் அல்லது பாரம்பரியங்களினாலும் நடக்கக்கூடியதா?

ரோமர் 3:20 - வாசிக்கவும், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணக் கிரியைகளினாலே நீதிமானக்கப்படுவதில்லை. இங்கே, நியாயப்பிரமாணம் என்று தேவன் பழைய ஏற்பாட்டையே குறிப்பிடுகிறார். ஆகவே, பழைய பிரமாணத்தின் மூலம் நாம் நீதிமான்களாக்கப்படவோ, குற்றமற்றவர் என்று தீர்க்கப்படவோ முடியாது

**B.** பழைய ஏற்பாட்டின்படி குற்றமற்றவர் என்று தீர்க்கப்பட முடியாதென்றால், பின்னே நீதிமானென்று எப்படி தீர்க்கப்பட முடியும்!
ரோமர் 3:20-28 வாசிக்கவும், இங்கே பழைய ஏற்பாட்டுச் சட்டதிட்டங்களின்படியாக இல்லாமல், நீதிமானாக்கப்படும் தன்னுடைய

வழி முதல் நூற்றாண்டிலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று தேவன் அறிவிக்கிறார். இயேசுவில் வைக்கும் விசுவாசத்தின் மூலம் நாம் நீதிமான்களென்று தீர்க்கபட முடியும். ஆத்துமாவைச் சுத்திகரிக்கும் இயேசுவின் இரத்தத்தின் வல்லமையில் நாம் விசுவாசம் வைக்க வேண்டும். **கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக** இருக்கும் மீட்பின் மூலமாக, தேவ கிருபையினாலே நாம் தாரளமாக நீதிமான்களாக்கப்பட முடியும்.

இங்கே ஒன்றை கவனமாக கவனியுங்கள் அந்த மீட்பும், நீதிமானாக்கப்படுதலும், “கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக இருக்கிறது”, நாம் முன்னமே பார்த்தது போல, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக வருவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு.

**C.** இன்றைக்கு அநேகராலே போதிக்கப்படுவதுபோல, விசுவாசத்தினாலே நீதிமானக்கப் படுவதென்பதன் பொருள், “விசுவாசத்தினாலே மாத்திரமா?”

யாக் 2:14-26 யாக் 2:14-ல், கிரியையில்லாத விசுவாசம் ஒருவனை இரட்சிக்காது என்று பார்க்கிறோம். இப்பகுதியில், நித்திய காலத்திற்கும் முக்கியமாக இருக்கக்கூடிய இக்கேள்விக்கான தேவனுடைய பதில் என்ன என்பதை கவனியுங்கள்.

17-ம் வசனத்தின்படி, கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறதென்று தேவன் கூறுகிறார். ஆகையால், கிரியையில்லாமல் விசுவாசம் மாத்திரம் இருப்பது செத்தது. இருப்பினும், இன்றைக்கும் அநேகர், விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிக்கப்படுகிறோம் என்று கூறுகின்றனர். செத்த விசுவாசத்தினால், நாம் இரட்சிக்கப்பட முடியுமென்று நாம் உண்மையாகவே நம்புகிறோமா? அதற்கும் மேலானது ஒன்று இருக்கிறது. அதைத்தான் தேவன் இப்பகுதியில் எடுத்துக் கூறுகிறார்!

19-ம் வசனத்தை கவனியுங்கள், விசுவாசம் மாத்திரம் என்பது பிசாசுகள் கொண்டிருக்கும் விசுவாசம் போன்றது. அவைகள் இறுதி நியாயத்தீர்ப்பின் நாளுக்கு பயந்து நடுங்குகின்றன. விசுவாசம் கொண்டிருப்பவர்கள் மற்றும் இரட்சிப்புக்கு விசுவாசம் மாத்திரம் போதும் என்று போதிக்கிறவர்கள் தேவன் இங்கே சொல்வதிலிருந்து இறுதி நாளில் பயந்து நடுங்க வேண்டியதாகவே இருக்கும்.

வசனம் 20-ல் தேவன் மறுபடியும், கிரியையில்லாத விசுவாசம் **செத்தது** என்கிறார். மேலுமாக, ஒருவன் விசுவாசத்தினாலே மாத்திரம் நீதிமானாக்கப்பட முடியுமென்பது **மூடத்தனமானது** என்கிறார்.

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் 21-23 வசனப்பகுதியில் பேசப்பட்டிருக்கிறார். ஆபிரகாம், கிரியைகளினாலே நீதிமானாக்கப்

பட்டிருக்கிறான் என்று தேவன் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் இந்த வசனப்பகுதியில் இடம் பெறுகிற மிகுந்த அர்த்தம் தரும் வாக்கியத்தை கவனியுங்கள். தன்னுடைய குமாரனாகிய ஈசாக்கை பலி செலுத்தும்படி தேவன் கட்டளையிட்டபோது, ஆபிரகாமின் **விசுவாசமும், கீழ்ப்படிதலுள்ள கிரியைகளோடே** கூட **முயற்சி செய்தது** என்று பார்க்கிறோம்.

அவனுடைய கிரியைகளினாலே, அவனுடைய விசுவாசம் **முழுமையடைந்தது** அல்லது **பூரணப்பட்டது**. ஆகவே, முழுமையான விசுவாசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, நாம் நம்முடைய விசுவாசத்தை தேவனுக்குக் கீழ்ப்படிகிற கிரியைகளோடு சேர்த்து முயற்சிக்க வேண்டும். ஆகவே, கீழ்ப்படிதலில்லாத விசுவாசம், முழுமையற்ற விசுவாசம் என்று நன்றாகவே தெரிகிறது. கண்டிப்பாகவே, முழுமையற்ற விசுவாசத்தைக் கொண்டு எந்த ஒரு மனிதனும் இரட்சிப்படைய முடியாது.

ஜீவிக்கின்ற, செயல்பாடுகள், கீழ்ப்படிதலோடு கூடிய விசுவாசத்தைக் கொண்டு, ஆபிரகாம் **நீதியுள்ளவனென்று** அறிவிக்கப்பட்டு, தேவனுடைய **சிநேகிதன்** என்று அழைக்கப்பட்டார். நாமும், நீதியுள்ளவர்களென்று காணப்பட்டு, தேவனுக்கு சிநேகிதனாயிருக்க வேண்டுமென்றால் அதே மாதிரியான விசுவாசத்தை நாம் கொண்டிருக்க வேண்டும்!

வசனம் 24-ல் இரட்சிப்புக்கும், நீதிமானாக்கப்படுதலுக்கும் விசுவாசம் மாத்திரம் போதும் என்பவர்களுக்கு, தேவன் மரண அடி கொடுக்கிறார். "மனிதன் கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுகிறான்," என்று கூறுகிறார். அதோடு அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. மிகவும் திட்டமாக, மனிதன் **விசுவாசத்தினாலே மாத்திரமல்ல,** கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுகிறான் என்று கூறுகிறார்.

தேவன், இப்பகுதியில், மனிதன் விசுவாசத்தினாலே மாத்திரம் நீதிமானாக்கப்படுகிறதோ அல்லது இரட்சிக்கப்படுகிறதோ இல்லை என்கிறார். அப்படியானால், இன்றைக்கு எப்படி அநேக பிரசங்கிகளால், தேவன் மிகத்தெளிவாகக் கொடுத்திருக்கிற இந்த போதனையோடு முரண்பட்டு, விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிக்கப்படுகிறோம் என்று போதிக்க முடிகிறது? இந்தப் பொய் போதனைகள், ஒருவன் போதித்தால் மனுஷனுடைய உபதேசப்படி போதிக்காமல், தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் என்ற வசனத்தின்படியாக ஒழிந்து போக வேண்டுமென்று ஜெபிக்கிறோம்!

ராகாப் பற்றி வசனம் 25ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்த அப்பெண்ணைப் பற்றி தேவன் என்ன சொல்லுகிறார்? அவள் **கிரியைகளினாலே** நீதிமானாக்கப்பட்டிருக்கிறாள்.

அர்த்தம் மிகுந்த இவ்வேத பகுதியை வசனம் 26ஐக் கொண்டு தேவன் எப்படி முடிக்கிறார் என்று பாருங்கள். கிரியையில்லாத விசுவாசம் **செத்ததாயிருக்கிறதென்று** மறுபடியும் கூறுகிறார்.

யாக் 2:14-26-ல் தேவன் என்ன சொல்லுகிறார் என்பதை தொகுத்துப் பார்ப்போம். கிரியையில்லாத விசுவாசம் **செத்தது** (வ. 17,20,26)

கிரியையில்லாத விசுவாசம் பிசாசுகளுடைய விசுவாசம் போன்றது. அவைகளை அவ்விசுவாசம் பயந்து நடுங்கும்படி செய்ததுபோல நம்மையும் நடுங்கச் செய்யும் (வ 19)

ஆபிரகாம், கிரியைகளில்லாத, செத்த விசுவாசம் கொண்டிராமல், ஜீவிக்கின்ற, செயல்படுகின்ற, கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் கொண்டவனாயிருந்தான் (வ 21-23) அவனுடைய விசுவாசம் கிரியைகளோடே கூட முயற்சி செய்து, அக்கிரியை மூலம் அவன் விசுவாசத்தை பூரணப்படுத்தியது. அந்த கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின் பலனாக, அவன் நீதியாக எண்ணப்பட்டு, தேவனுக்கு சிநேகிதனென்னப்பட்டான்!

ஒருவன் **விசுவாசத்தினாலே மாத்திரமல்ல** கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுகிறான். (வ. 24)

ராகாப், அவளுடைய கிரியைகளினாலே நீதியுள்ளவளென்று எண்ணப்பட்டாள் (வ. 25)

அன்பானவர்களே, தேவன் இதைவிடத் தெளிவாகச் சொல்ல முடியாது! தேவன் இந்தப்பகுதியில் விவரித்திருப்பது போல, நாம் ஒவ்வொருவரும் நீதியுள்ளவர்களென்று, எண்ணப்பட்டு, தேவனுடைய சிநேகிதர்களாவதற்கு, ஆபிரகாம் போல ஜீவிக்கிற, செயல்படுகிற, கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போமாக!

அடுத்த மாதம், தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டு, நம்முடைய விசுவாசம் எப்படி நம்முடைய பாவங்களை நீக்கி, இரட்சித்து, இயேசுவோடு நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்கிறது என்று பார்ப்போம்.

***EZSR*** ***CHARLIE DIPALMA***

# சுனாமி தரும் தேவ எச்சரிப்பு

அருமையான தேவபிள்ளைகளே நாம் தேவனுக்குப் பிரியமாய் நடக்க வேதம் அநேக ஆலோசனைகள் தருகிறது. அதே வேதமானது தவறான வழியில் செல்லாதிருக்கவும் அநேக எச்சரிப்புகளையும் தருகிறது. அதை கவனித்து நடக்க வேண்டியது நம் கடமையாகும். கடந்த வருடக் கடைசியில் ஏற்பட்ட கடலோர அழிவுகளின் பாதிப்பு நம் மனதை விட்டு அகலாதிருக்கும் இவ்வேளையில் தேவ வார்த்தைகளில் காணப்படும் எச்சரிப்பையும் உணருவோம்.

தற்போது அந்தமான் தீவுகளில் தொடர் பூமியதிர்வுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைப் போன்ற நிகழ்ச்சிகள் வேதத்தில் பதிவு செய்யப்பட்டு நமக்கு எச்சரிப்பாக உள்ளது. தீரு என்ற கடலோர பட்டணத்தை தேவன் சமுத்திர அலை மூலமாக அழித்து சங்காரம் பண்ணியுள்ளார். (எசேக் 26:2,15-20) வியாபார பெருமையினாலும், வேசித்தனத்தின் அருவருப்பினாலும் நிறைந்த அப்பட்டணம் அழிக்கப்பட்டது நம் தேவனின் கோபத்தை நினைவுபடுத்துகிறது. (ஏசா 51:14).

வேதாகமத்தின்படி ஜனங்களின் அழிவுக்கு முக்கியக்காரணம் அவர்களுடைய அக்கிரமம் (ஆதி 6:5) பொல்லாங்கானவைகளை இச்சித்தல் (எண் 25:9) சிலர் தேவனுடைய வல்லமையில் சந்தேகப்பட்டு பரீட்சை பார்த்து அழிந்தனர் (எண் 21:5,6) இன்னும் பலர் அவிசுவாசம் மற்றும் கடின இருதயத்தால் அவருக்கு விரோதமாக முறுமுறுத்து சங்காரக்காரனால் அழிக்கப்பட்டனர் (எண் 16:41) இவைகள் எல்லாம், இவ்வுலகத்தின் கடைசி நாட்களில் உள்ள நமக்கு எச்சரிப்புக்காக எழுதப்பட்டுள்ளது. (I கொரி. 10:11)

ஒரு முறை பிலாத்து சில கலிலேயருடைய ரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்தபோது அதைக் குறித்து நம் ஆண்டவருக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கு இயேசு பிரதியுத்திரமாக இறந்து போன அவர்கள் மாத்திரம் பாவிகள் அல்ல, மனந்திரும்பாமற் போனால் நீங்களும் அப்படியே கெட்டு போவீர்கள் என்று எச்சரித்தார். சீலோவாமில் கோபுரம் விழுந்து 18 பேர் கொல்லப்பட்டதற்கும் இதே பதிலைத்தான் ஆண்டவர் சொன்னார் (லூக் 13:1-9) தொடர்ந்து வரும் உவமையில் ஒருவன் ஆவிக்குரிய கனிகளைக் கொடாவிட்டால் அழிக்கப்படுவான் என எச்சரிக்கிறார்.

நாம் செய்ய வேண்டியது என்ன? தீர்க்கதரிசி செப்பனியா கூறுகிறார் (செப் 1:6) முதலாவது நாம் தேவனை விட்டு பின் வாங்கக் கூடாது (எபி 3:12) இரண்டாவதாக நாம் அவரை தேடி, விசாரிக்க வேண்டும், வேத வாசிப்பும், ஜெபமும் அனுதின வாழ்வில் அதிகப்படுத்த வேண்டும்.

உலகல் உதவாத காரியங்களையெல்லாம் ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெறும் மக்கள் தேவனை தேடுவதில் விசாரிப்பதில் குறையுள்ளவர்களாக இருக்கிறார்கள். தம் சிருஷ்டிப்புகளினால் தம்மை வெளிப்படுத்தியுள்ள தேவனை ஜனங்கள் தேடி விசாரியாத பட்சத்தில் சங்காரம் நிச்சயம் (ரோம 1:19-32) ஆகவே அவரை தேட வேண்டும் என்பது தேவனின் எதிர்பார்ப்பு மற்றும் கட்டளையாகும் (அப். 17:27-31) நாமும் வேதத்தின் மூலம் அவரை தேடி விசாரித்து அவரை அண்டிக் கொண்டு கோபத்தின் நாட்களுக்கு தப்புவோமாக! ஆமென்.

**சகோ. K. பாண்டியன்**
**அரக்கோணம்.**

## பிலிப்பியர் நிருபத்தில் பவுலின் ஜெபம்!

1. தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகட்டும் (1:10)
2. உருக்கமான அன்புடையவர்களாயிருங்கள் (1:8)
3. அன்பானது அறிவிலும் உணர்விலும் பெருகட்டும் (1:9)
4. நீதியின் கனிகளால் நிறையுங்கள் (1:10)
5. நற்கிரியைகளை கடைசி பரியந்தம் நடத்துங்கள் (1:3-6)
6. கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களாயிருங்கள் (1:11)
7. இடறலற்றவர்களாயிருங்கள் (1:11)


# எக்லீசியா வேதாகமக் கல்லூரியின்
## ஐந்தாவது பட்டமளிப்பு விழா - 12.02.2005



ஆங்கிலத்தில்
வரவேற்புரையாற்றுகிறார்
சகோ. பிக்கின்ஸ்
அதை தமிழில் மொழியாக்கம்
செய்கிறார்
சகோ. டேனியல் துரைராஜன்
(திருச்சி)




கூடிவந்தவர்களை
ஜெபத்தில்
வழிநடத்துகிறார்
சகோ. லூக்




கூடிவந்தவர்களுக்கு
ஆங்கிலத்தில்
செய்தியளிக்கிறார்
சகோ. குரோலி (USA)
தமிழில் மொழியாக்கம்
செய்கிறார்
சகோ. ஏசையன்



பட்டமளிப்பு விழாவில்
கலந்து கொண்டோரின்
மற்றொரு பகுதி

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription. Rs.30/-

# எக்லீசியா வேதாகமக் கல்லூரியின்

## ஐந்தாவது பட்டமளிப்பு விழா - 12.02.2005



சகோ. சார்லியிடமிருந்து
மாணவன் சாமிதுரை
பட்டம் பெறும் காட்சி



சகோ. ஸ்டாக்டனிடமிருந்து
மாணவன் பிரபு
பட்டம் பெறும் காட்சி



சகோ. குரோலியிடமிருந்து
மாணவன் ரமேஷ் பாபு
பட்டம் பெறும் காட்சி



சகோ. சார்லியிடமிருந்து
மாணவன் விக்டர் பட்டம்
பெறும் காட்சி